(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.73/2014 |
| Deposition Of Witness for | : | PW8 |
| Name | : | **Thiru.M.Thangapandian** |
| Father's Name | : | Tr.Mahamuni |
| Village | : | உத்தங்குடி |
| Taluk | : | மதுரை மாவட்டம் |
| Calling | : | லாட்ஜ் மேனேஜர்(ஓய்வு) |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **17th July 2025.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது மதுரையில் உத்தங்குடியில் குடியிருந்து வருகிறேன். திருப்பரங்குன்ற சாலை மதுரையில் அமைந்துள்ள ஹோட்டல் விஜயில் 2009 முதல் 2011-ம் ஆண்டு வரை நான் மேனேஜராக பணிபுரிந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் விஜய் ஹோட்டல் பில்லில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த

பில்(அ.த.சா.ஆ.6) என்னால் எழுதப்பட்டதுதான். திரு.முருகசாமி என்கின்ற நபர் 08.11.2011 ல் இரவு 7.50 மணி முதல் 8.00 மணிக்குள் அறை பதிவு செய்தார். அவருக்கு விஜய் ஹோட்டல் அறை எண்.308 ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி நபர் கடந்த 09.11.2011 ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில் அறையை காலி செய்துவிட்டார். இந்த வழக்கு சம்பந்தமாக என்னிடம் போலிசார் விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. மேற்படி ஹோட்டல் விஜயில் எத்தனை மேலாளர் என்றால் நானும், சரவணன் என்ற நபரும் இருந்தோம், சரவணன் பகல் நேரத்திலும், நான் இரவு நேரத்திலும் பணியில் இருந்தோம். சரவணனுக்கு பணி நேரம் என்ன என்றால் காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை. எனது பணி நேரம் என்ன என்றால் இரவு 8.30 முதல் 9.00 மணியிலிருந்து மறுநான் காலை 9.00 மணிவரை. திரு.முருகசாமி என்பவர் எத்தனை மணிக்கு ஹோட்டலில் அறையை நேரடியாக வந்து பதிவு செய்தாரா என்றால் சுமார் 7.50 முதல் 8.00 மணியிருக்கும். கடந்த 08.11.2011 ம் தேதி நேரடியாக வந்து தான் அறையை பதிவு செய்தார்.

2. சரவணன் பணிநேரத்தில்தான் வந்தாரா என்றால் ஆமாம், நானும் அங்கு இருந்தேன். அ.த.சா.ஆ–6–ல் சரவணம் எழுதாமல் நான்

என்ன காரணத்திற்காக எழுதி கையொப்பம் செய்தேன் என்றால் சரவணன் அந்த இடத்தில் இல்லாத காரணத்தினால் நான் அ.த.சா.ஆ–6 ஐ பூர்த்தி செய்து கையொப்பம் செய்தேன். சரவணன் அந்த நேரத்தில் எங்கு சென்றிருந்தார் என்றால் தற்சமயம் ஞாபகமில்லை. அறை எண்.308 ல் எத்தனை நபர்கள் தங்கியிருந்தார்கள் என்றால் முருகசாமி என்ற ஒரு நபர் மட்டும்தான் தங்கியிருந்தார். அ.த.சா.ஆ–6 ல் தங்கியிருந்த நபர்களின் எண்ணிக்கை 2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

3. பொதுவாக ஒரு அறையை ஒரு நபருக்கு வழங்கும் போது அந்த நபர் குறித்த முழு முகவரியையும் பெற்றுக் கொண்டுதான் வழங்குவோம் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.6–ல் முருகசாமி என்ற பெயர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது மற்ற விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் Booking Register–ல்தான் முழு விபரங்களையும் குறிப்பிடுவோம். அ.த.சா.ஆ–6 ல் பெயரை மட்டும்தான் குறிப்பிடும் வழக்கம் இருந்தது. அந்த Booking Register–ஐ போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஞாபகமில்லை. அ.தசா.ஆ–6 ல் முருகசாமியின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் அ.த.சா.ஆ.6–ல் அறையை எடுக்கும் நபரிடம் கையொப்பம் பெறும் வழக்கம் இல்லை, அதனால் பெறப்படவில்லை.

4. அ.த.சா.ஆ.6–ல் பெயர் மற்றும் முகவரி என்று அச்சிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் அதில் அவரது விலாசம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். 09.11.2011 என்ற தேதி அறையை காலி செய்ததற்காக என்று குறிப்பிடப்படவில்லை என்றால் அ.த.சா.ஆ.6 ல் அறையை எடுத்த தேதியும் காலி செய்த தேதியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அறையை காலி செய்யும் போது தான் மேற்படி ரசீது தயார் செய்யப்படும். அதன் காரணமாகவே 09.11.2011 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.6–ல் 2 நபர்கள் தங்கியிருந்ததாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான், இன்னொரு நபர் யார் என்பது பற்றி எனக்கு தெரியாது. அ.த.சா.ஆ.6 உண்மையான ரசீது இல்லை என்றாலும் லஞ்ச ஒழிப்பு போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ஹோட்டல் விஜய் என்பது கிழக்கு பார்த்த கட்டிடம் என்றால் சரிதான். மேற்படி ஹோட்டலுக்கு உள்ளே நுழைந்தவுடன் இடது புறம் வரவேற்பு அறை உள்ளது என்றால் சரிதான். வலது புறம் அங்கு வருபவர்கள் அமரும் இடமா என்றால் இல்லை, முதல் தளத்தில்தான் வருபவர்கள் அமருவதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

5. நான் சொல்வதுபோல் முதல் தளத்தில் வருபவர்கள் அமரும் இடம் கிடையாது என்றாலும் கீழ் தளத்தில் வரவேற்பு அறைக்கு எதிரே

தான் அந்த இடம் என்றால் சரியல்ல. வரவேற்பு அறைக்கு மேற்கே Lift மற்றும் படிக்கட்டுகள் உள்ளது என்றால் சரிதான். எத்தனை தளங்கள் மற்றும் எத்தனை அறைகள் உள்ளது என்றால் 4 தளங்கள் மற்றும் 36 அறைகள் உள்ளன. அந்த தளங்கள் வடக்கு தெற்காக அமைந்துள்ளதா என்றால் ஆமாம். அந்த தளங்களில் நடுவில் பாதையும் இருபுறமும் அறைகள் அமைந்துள்ளது என்றால் சரிதான். அறை எண்.308 என்பது எந்த இடத்தில் அமைந்துள்ளது என்றால் நடுவில் செல்லும் பாதைக்கு கிழக்கு திசையில் அமைந்துள்ளது. அந்த அறையில் எந்த பக்கம் ஜன்னல் உள்ளது என்றால் கிழக்கு திசையில்தான் ஜன்னல் உள்ளது. அந்த அறையில் என்னென்ன பொருட்கள் இருந்தது என்றால் டி.வி., சிறிய டேபிள், ஒரு நாற்காலி இருந்தது. வரவேற்பு அறையின் அருகில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டிருந்தது என்றால் ஆமாம்.

6. அன்றைய தேதியில் கண்காணிப்பு கேமரா பதிவுகளை பார்த்தால் யார் யார் வந்தது அறையில் தங்கியது என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். அறை எண்.308 லிருந்து Lift க்கு செல்வதற்கு எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்றால் சுமார் 10 அடி. நான் சொல்வதுபோல் அன்றைய தினம் ஹோட்டல் விஜயில் பணியில் இல்லை

என்றாலும் லஞ்ச ஒழிப்பு போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.07.17 15:00:39 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.